**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 30 / 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW : 1** |
| **Name** | **:** | **Dr. திருமதி. ராஜேஷ்வரி** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது செயின்ட் மைக்கேல் பள்ளி அருகில், திருவள்ளுவர் நகர், 5வது தெரு, பார்க் டவுன் extension-ல் குடியிருந்து வருகிறேன். எனக்கு தமிழ் பேசத் தெரியும். எழுதப் படிக்கத் தெரியாது. கடந்த 2004ம் ஆண்டு எனக்கும் என் கணவருக்கும் ஆந்திராவில் வைத்து திருமணம் நடைபெற்றது. பின்னர், கடந்த 2007-2012 வரை Chinaல் தங்கி நானும் என் கணவரும் MBBS படித்து வந்தோம். நான் வடமலையான் மருத்துவமனையிலும், என் கணவர் மதுரை அப்பலோ மருத்துவமனையிலும் வேலை செய்து வந்தோம். நானும் என் கணவரும் சந்தோஷமாக குடும்பம் நடத்தி வந்தோம். எங்கள் வேலை பளுவின் காரணமாக எங்களுக்குள் சிறுசிறு முரண்பாடுகள் ஏற்பட்டது. அதன் காரணமாக என் கணவர் கோவித்துக் கொண்டு, அவரது

பெற்றோர் ஊருக்குச் சென்றுவிட்டார். பலமுறை நான் போன் செய்தும் என்னோடு சேர மறுத்துவிட்டார். அதனால் என் கணவர், என்னோடு சேர்ந்து வாழவேண்டும் என்று காவல் நிலையத்தில் போய் சொன்னேன். அங்குள்ள போலீசார் எழுதிக் கொடுத்ததில் கையொப்பம் போட்டேன். அதில் உள்ள விபரங்கள் பற்றி நான் படித்துப் பார்க்கத் தெரியாது. புகாரினை எழுதிய நபரும் புகாரினை படித்துக் காண்பிக்கவில்லை. **புகார் மனுவில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆகும்**. எனது கணவரும் அவரது பெற்றோர்களும் என்னிடம் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை. என்னையும் கொலை முயற்சியோடு தாக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, 2,3 எதிரிகள் 1வது எதிரியைத் தூண்டிவிட்டு, எனது முழு சம்பளத்தை தரக் கேட்டதாகவும், எனது தகப்பனாரிடம், தனியாக மருத்துவமனை கட்டித் தர கேட்டும், பலவேறு சமயங்களில் 1வது எதிரி என்னை அடித்தும் திட்டியும் மன உளைச்சல்களுக்கு ஆளாக்கியதாகவும், 03.10.2013ம் தேதி இரவிலும் மறுநாள் 04.10.2013ம் தேதி காலை 07.30 மணியளவிலும், 1 மற்றும் 3வது எதிரிகள் சேர்ந்து அடித்தும், 1வது எதிரி எனது தலை முடியைப் பிடித்து சுவரில் முட்ட வைத்தும், அடுப்பங்கறையில் இருந்த பொருட்களை எறிந்தும், காலால் மிதித்து துன்புறுத்தியதாகவும், 2வது எதிரி 1வது எதிரியின் செயலை தடுக்க

முற்படாமல் உடந்தையாக இருந்ததாகவும், 1,3 எதிரிகள் என்னை படுக்கையறைக்கு இழுத்துக் கொண்டு போய், மரக்கட்டி மெத்தை மீது தள்ளிவிட்டு, 3வது எதிரி, 1வது எதிரியிடம் இவளைக் கொல்லுடா உனக்கு ஒரு பணக்கார பொம்பளையைப் பார்த்து கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று சொல்லி போர்வையை எடுத்துக் கொடுத்ததை 1வது எதிரி வாங்கி எனது முகத்தில் மூடி அமுக்கியும், பழனியம்மாள் என்னை எழுந்து விடாமல் இருக்க எனது கால்களை அமுக்கி கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், நான் மயக்கம் அடைந்ததைப் பார்த்து மூவரும் வீட்டைவிட்டு சென்றுவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது நானும் எனது கணவரும் இரண்டு ஆண் குழந்தைகளுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது மூத்த மகன் engineering படித்து முடித்து விட்டு வேலைக்குப் போகப் பேகிறார் என்றும் எனது எனது இளைய மகன் engineering படித்து வருகிறார் என்றால் சரிதான். எனவே எனது மற்றும் எனது குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, எதிரியோடு சமாதானமாகப் போய்விட்டேன் என்றும் அதனால் எதிரியைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது என்பதாலும் தமிழ் பேச மட்டும் தெரியும் என்பதாலும் புகாரினை நான் எழுதவில்லை என்றும் காவல் நிலையத்தில் இருந்த போலிசார் எழுதிக் கொடுத்ததில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் அதில்

உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை அல்ல என்றாலும் சரிதான். புகாரினை எழுதிய நபர் அதை என்னிடம் படித்துக் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவரும் அவரது பெற்றோர்களும் என்னிடம் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை என்றாலும் என்னையும் கொலை முயற்சியோடு தாக்கவில்லை என்றாலும் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை